★ அரசின் தீர்வுத் திட்டம் சில வாரங்களில் வெளியாகும்!


விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 17 இதழ் 147
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 01 - 7 - 1995


(கொழும்பு)
வடக்கு கிழக்கு இனப் பிரச்னைக்கு தீர்வு காணக் கூடிய திட்டமொன்றை அரசாங்கம் வெளியிடவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.
அரசின் இந்த சமாதானத் திட்டம் தற்பொழுது தயாரிக்கப்பட்டுவருகின்றது அடு

( 3ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் மீட்கப்பட்ட ஆயுதங்களின் முழு விபரம்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ முகாம் தகர்ப்பின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட முழு ஆயுதங்களினதும் விபரம் வருமாறு:
* பிஸ்ரல் - 01
* ரி-56 - 99
* ரி56-1 - 38

[4-ம் பக்கம் பார்க்க]

## விடுதலைப்புலிகளை தடைசெய்ய தென் மாகாணசபை தீர்மானம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யக்கோரும் தீர்மானமொன்றை தென் மாகாண சபை நிறைவேற்றியுள்ளது.
இந்தத் தீர்மானம் தற்

(4ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் நடாத்தும் தமிழீழப் போராட்டத்திற்கு மறுமலர்ச்சி தி.மு.க. முழு ஆதரவு

## திருச்சி மாநாட்டில் தீர்மானம்

(லண்டன்)
விடுதலைப் புலிகள் நடாத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவித்து திருச்சியில் நடைபெறும் மறுமலர்ச்சி தி. மு. க கட்சியின் மாநாட்டில் தீர்மானிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனித்தமிழ் ஈழத்தை அடைய விடுதலைப் புலிகள் அமைப்பு நடாத்தும் வீரமிகு போராட்டத்தை தாம் முழுமையாக ஆதரிப்பதாக பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் ம.தி.மு.க.வின் பொதுச்செயலர் திரு. வை. கோபலசாமி தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூன்றுநாள் மாநாடு நேற்று திருச்சியில் ஆரம்பமானது. இதனை முன்னிட்டு வை. கோபாலசாமி பி.பி.ஸிக்கு நேற்று பேட்டியொன்றினை வழங்கியிருந்தார். அப்போதே அவர் தானும் தனது கட்சியும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஆதரிக்க முடிவெடுத்துள்ள தகவலைத் தெரிவித்தார்:

இந்த மூன்றுநாள் மகாநாட்டை முன்னிட்டு நேற்று திருச்சியில் சுமார் 10 கிலோ மீற்றர் நீளமான பெரும் ஊர்வலமொன்றை மறுமலர்ச்சி தி.மு.க. நடாத்தியது.

இந்த ஊர்வலத்தில் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவான கருத்து மேலோங்கியிருந்ததாக பி.பி.ஸியின் செய்தி முகவர் ஜோர்ச் ஆர்னி சென்னையிலிருந்து தெரிவிக்கிறார்.

வடக்கு-கிழக்கில் தனியான தமிழ் மாநிலம் ஒன்று உருவாவதை ஆதரித்து இம் மாநாட்டில் தீர்மானம் ஒன்று

(3ம் பக்கம் பார்க்க)


'ஈழநாடு'
வாரமலர்
02 . 07 . 95
ஞாயிறு
வெளிவருகின்றது

- மணியன்
- சிரித்திரன் சுந்தர்
- கருணைச்சுதன்
- மு. வே. யோ. வாஞ்சிநாதன்
- மு. திருநாவுக்கரசு
- ச. தியாகராசா

ஆகியோரினதும் படைப்புக்களுடன், வாரபலன், சிறுவர் அரங்கம், பெண்கள் உலகம் ஆகிய பகுதிகளும் இடம்பெறுகின்றன.

அதிக பக்கங்கள்
விலை ரூபா
ஐந்து மட்டுமே


## இராணுவத்தில் நான்கு இளம் பிக்குகள் இணைவு

(கொழும்பு)
இலங்கை இராணுவத்தில் நான்கு இளம் பௌத்த பிக்குகள் இணைந்துள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.
இந்த நால்வரும் இராணுவத்தின் கெமுனு படைப்பிரிவுக்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.
தாம் அணிந்திருந்த மஞ்சள் அங்கியை தமது தலைமைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவில் காவியமான மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த எட்டு மாவீரர்களில் ஆறு மாவீரர்களது வித்துடல்களைத் தாங்கிய ஊர்தி நேற்று யாழ். குடாநாடு பூராவும் பவனி வந்தது.
இந்த ஊர்தி பவனி நேற்றுக் காலை 10 மணிக்கு கோண்டாவில் அரசியல் துறைச் செயலகத்தில் இருந்து ஆரம்ப

(2-ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு முகாமிலிருந்து நேற்றும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவுப் பகுதியில் இருந்து நேற்றுக் காலையும், பிற்பகலும் யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்

(3ம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு முகாம் அழிப்பின்போது கெமுனு வோச் படைப்பிரிவு நிலைகொண்டிருந்தது

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்த சமயம் மண்டைதீவின் வடபகுதியில் 'கெமுனு வோச்' படைப்பிரிவின் 10 வது பட்டாலியன் நிலைகொண்டிருந்ததாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மண்டைதீவு தாக்கப்பட்ட வேளையில் ஊர்காவற்றுறைப் பகுதியில் 27 வதுபிரிகேட் நிலை

(3ம் பக்கம் பார்க்க

## 'ஈழநாடு' ஊழியர் ஷெல் வீச்சுக்கு பலியானர்

(யாழ்ப்பாணம்)



யாழ். நகர் நோக்கி கடந்த 28-ம் திகதி புதன்கிழமை பலாலி இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் 'ஈழநாடு' பத்திரிகை நிறுவன ஊழியர் திரு. சி. அருளானந்தம் அகால மரணமானர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்று காலை 8-30 மணியளவில், பகல் நேரக் கடமைக்காக இவர் அலுவலகம் நோக்கிவந்து கொண்டிருக்கையில் 'ஈழநாடு' அலுவலகத்திற்கு சமீபமாக மானிப்பாய் வீதியில் வீழ்ந்த ஷெல்லினல் இவர் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்.

(4-ம் பக்கம்பார்க்க)

அன்று போர்த்துக்கேயத் தளபதியின் . . . . . . . .
கண்ணைக் கோதிய காக்காப் பிள்ளையாருக்கு
★ இன்று [01-07-1995] வேட்டைத் திருவிழா ★

— சோழியூரான்

[சி 1534]

## வரி விளம்பரம்

### O/L MATHS' 95

Distinction, Credit பெறு பேறடைய விசேட பயிற்சிகளுடன் (ஆண்டு 9,10) உட்பட B. sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோவிலடி, சிவன்கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. சி-1530

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினைப் பத்திரம் 1, வினுப் பத்திரம் 2 க்குரிய "பொது விவேகம், பொதறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம், (ஏ-5027)


## பாடசாலை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கடந்தமாதம் இராணுவ நடவடிக்கையால் தொண்டைமானுற்றிலுள்ளமக்கள் இடம் பெயர்ந்த காரணத்தால் யா/ தொண்டைமானுறு வீரகத்திப்பிள்ளை மா..வித்தியாலயமும் இடம்பெயர்ந்து தற்போது யா/ உடுப்பிட்டி அ. மி கல்லூரிக்கட்டடத்தில் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது

ஏற்கனவே விடுமுறைகாலங்களில் நடைபெற்று வந்த மேலதிக வகுப்புகள் இடம் பெயர்ந்த நிலையிலும் தொடர்ந்து நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. ரி

## இராசி பலன்

01-07-1995

சனிக்கிழமை

[தமிழுக்கு ஆனி-17]

திருதியை மு.ப 10.47வரை ஆயிலியம் பி.ப 4.00 வரை மரணயோகம் இராகுகாலம் காலை 8 56 முதல் 10 26 வரை சுபநேரம் பி.ப 2 56 முதல் 4 26 வரை சதுர்த்தியந்தம்

மேடம்- தொழில் வேற்றுமை அலைச்சல் இனசனப்பகை

இடபம்- முதியவர் ஆசி பணவரவு இனிய சம்பாசனை

மிதுனம்- குடும்பபகைமை வீண்விரயம் கோபப்படல்

கடகம்- தொழில்சிறப்பு பெண்நினைவு சுபகாரியம்

சிங்கம்- முயற்சிதாமதம் பிறர்துன்பம் அலைச்சல்

கன்னி- அதிகாரிகள்பாராட்டு சுபச்செய்தி கலந்துரையாடல்

துலாம்- உறவினர் வருகை சகோதர பாசம் கடமை உணர்வு

விருச்சிகம்- அடங்கிப்போதல் கடன்சுமை மனவேதனை

தனுசு- எரிந்து விழுதல் நலக்குறைவு காரியதடை

மகரம்- விடாமுயற்சி குடும்பசுகம் பயணம்

கும்பம்- கல்வியில் சிறப்பு மனக்களிப்பு தெய்வதரிசனம்

மீனம்- குறைகூறல்தொழில் வேதனை மனப்பயம்

— ஜோஸ்யர்


# பயிற்சி வினுத்தாள்கள்

(விடைகளுடன்)

இரண்டாம் தவணைப் பரீட்சைக்குத்தயாராகும் ஆண்டு- 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L மாணவர்களுக்காக எல்லா பாடங்களுக்குமான

பயிற்சி வினுத்தாள்கள் 3-7-95

முதல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

BOND புத்தக நிறுவனம்

58, A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5052)

# A/L 95

பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு

| | |
|---|---|
| இரசாயனவியல் | பொருளியல் |
| பௌதிகவியல் | கணக்கியல் |
| தாவரவியல் | வர்த்தகம் |
| விலங்கியல் | அளவையியல் |
| தூயகணிதம் | தமிழ் |
| பிரயோககணிதம் | புவியியல் |
| இந்து நாகரிகம் | கிறிஸ்தவம் |
| இந்துசமயம் | அரசியல் |

நாடகமும் அரங்கியலும்

ஆகிய பாடங்களுக்குரிய மாதிரி வினுத்தாள்கள் விடைகளுடன் 3 - 7 - 95 முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இப் பாடங்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு 1, 2ம் திகதிகளில் நடைபெறும்.

BOND புத்தக நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(ஏ-5051)

# தமிழ் தட்டெழுத்தாளர்

தமிழ் தட்டெழுத்தாளர் தேவை; ஆங்கில தட்டெழுத்தில் அனுபவமும் க. பொ. த உயர்தரத்தில் சித்தியும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும் விருப்புவோர் தமது சொந்தக் கையெழுத்தில் 5-7-95 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

BOND INSTITUTES

58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

(ஏ-5053)


# கண்ணீர் அஞ்சலி

## சின்னத்தம்பி அருளானந்தம்

[ நீர்வேலி ]

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10-06-1953 | 28-06-1995 |

யாழ். நகரில் 28 – 06 – 95 புதன்கிழமை காலை நடைபெற்ற 'ஷெல்' வீச்சுச் சம்பவத்தில் அன்னார் அகால மரணமானார்.

'ஈழநாடு' நிறுவனமும், ஊழியர்களும் அமரர் சி. அருளானந்தம் அவர்களின் மறைவு குறித்து தங்கள் இதயபூர்வ அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

நிர்வாகம், ஊழியர்கள்.

"ஈழநாடு"


யாழ்ப்பாணம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்

# கணக்காளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கணக்காளர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பங்கள் யாவும் "பொதுமுகாமையாளர், யாழ்ப்பாணம் ப. தெ. வ. அ. கூ. சங்கம் 330, கே. கே, எஸ். வீதி என்ற முகவரிக்கு 14-07-95 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்,

1 சம்பளத்திட்டம்

104/7 (புதிய சம்பள இல. 09)
1165 - 2170
..................
60X3 75X11

2. வயதெல்லை

20 - 40 சங்கப்பணியாளருக்குமுன்னுரிமைவழங்கப்படும்

3 தகைமைகள்

1. கூட்டுறவுப்பணியாளர் 8வது சம்பளத்திட்டத்தில் கணக்காளர் / உள்ளகக்கணக்காய்வாளர் பதவியில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

கூட்டுறவுப்பணியாளர்/9வதுசம்பளத்திட்டத்தில் கணக்காளர்/உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர் / கணக்கு லிகிதர் ஆகிய பதவிகளில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

2. ஐக்கிய ராச்சியத்தில் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதித் தேர்வுடன் அங்கீகரிக்கப்பட்ட வாணிப/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை மட்டத்தில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

3. கூட்டுறவுப் பணியாளர் தராதரபத்திர(உயர் தரம்) க, பொ. த. (உயர்தரம்) ஆகியவற்றில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் கணக்கியல்/கணக்காய்வுத்துறையில் 4 வருடங்களுக்கு குறையாத மேற்பார்வைமட்ட அனுபவம்.

பொதுமுகாமையாளர்

01- 07- 1995.

(ஏ-5050)


## இறுதிவீரவணக்கமும் நினைவுக்கல்நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 16ம் திகதியன்று திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்து கைது செய்ய முற்பட்ட போது சயனைற் அருந்தி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் எழில் மாறன் சாரங்கன் (சிதம்பரநாதன் - தயாகரன், திருமலை த. மு: சீலன்நகர், நாவற்குழி) அவர்களின் திருவுருவப் படம் பி. ப. 2 மணியளவில் அவரது நாவற்குழி, சீலன் நகர் இல்லத்திலிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு அரியாலை கலைமகள் ச. ச. நிலைய முன்றலில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு பிற்பகல் 3 மணியளவில் இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரரது நினைவுக்கல் நாட்டப்படும். -ரி

## மண்டைதீவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாகியது.

இந்த ஊர்தி பவனி வடமராட்சி: தென்மராட்சி போன்ற பகுதிகள் எல்லாம் ஊர்வலமாக பவனி வந்தது.

ஊர்தி பவனி சென்ற இடங்கள் எல்லாம் மக்கள் வீதியோரங்களில் நின்று மலர் தூவி அஞ்சலி செலுத்திய காட்சி மக்களின் நெஞ்சங்களை நெகிழ வைத்தது, ஒலி பெருக்கி மூலம் சோக கீதங்களும் ஊர்தி பவனியில் இசைக்கப்பட்டது. இதே வேளை நேற்று யாழ். குடாநாடே சோகத்தில் தளும்பிக் காணப்பட்டது.

குடாநாட்டின் பல்வேறு இடங்கள் எங்கும் வீரச்சாவடைந்த மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு தீச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலிகள் இடம் பெற்றன. சோக கீதங்களும் நாலா பக்கமும் ஒலிபெருக்கி மூலம் இசைக்கப்பட்டது.

பல்வேறு இடங்கள் எல்லாம் வாழைகள் தோரணங்கள் கட்டுப்பட்டுள்ளதோடு சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகளாலும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு வீரகாவியமான மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது

(170-162-90-ரி)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-07-01

சனி இரவு

08-02 கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி தமிழீழன் எழுதிய "உயிராயுதம் தரித்த உத்தமக் கரும் புலிகள்,
08-30 செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம் "மலசலகூட பாவனை"

1995 – 07 – 02

ஞாயிறு காலை

07-02 மாவீரவணக்கம்
07 15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
08-00 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-07-01

சனி மாலை

05-01 சிந்தனைச்சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினடி வினு
06-00 சிந்தனைக்குச் சில வினடிகள்
06-02 பாமாலை அதனைத் தொடர்ந்து 6-30 மணிவரை என் தெரிவு:

மணிவாக்கு

மனிதனை மனிதனுக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே.

— மாத்யூஸ்,

# வடக்கை இராணுவம் கைப்பற்ற முயன்ருல் பேரிழப்பு ஏற்படும்

## உயாங்கொட எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கை இராணுவம் கைப்பற்ற முயன்ருல் அது பெரும் இழப்புக்களை சந்திக்கும் என கலாநிதி ஜயதேவ உயாங்கொட தெரிவித்துள்ளார்.

'யுக்திய' சிங்கள பத்திரிகையில் அவர் இக்கருத்தை தெரிவித்துள்ளார். இது பறறி அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கை பிடிக்கும் யுத்தம் ஒன்றில் புலிகளின் இழப்பு மிகக் குறைவாகவேஇருக்கும். அப்பாவி மக்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாவர். இராணுவத்திற்கு அனுமதி வழங்கினுல் புலிகளிடமிருந்து யாழ் குடாநாட்டை கைப்பற்றலாம் என சில இராணுவ சக்திகளும் பத்திரிகையாளர்களும் சிங்கள இனவாத சகதிகளும் சொல்கின்றன. இதனை அரசாங்கமும் ஏற்று நடப்பது போல் தெரிகிறது.

இதேவேளை சர்வகட்சிகளின் தீர்மானத்திற்கு அமைய வடக்கு கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதாக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் கூறியிருப்பதும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதி முறை ஒழிப்பது பற்றிய அரசின் நிலைப்பாடும் சாத்தியமற்றதாகும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்

கே- சி

பண்டிதமணி நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட பண்டிதமணி நினைவுப்பேருரை இன்று 01ம் திகதி சனிக்கிழமை பி.ப 3-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்

## நமது நோக்கு

### இராணுவ பலவீனம்!

பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரத்வத்தை யுத்தத்தை ஒரு வருடத்தில் முடிப்பேன் என்றுகூறினுர். அவரிலும் இன்னெருபடி முன்னேறிஇன்னெருஅமைச்சின் பிரதிஅமைச்சரான லக்ஷ்மன் கிரியல்ல வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடக்கும் இந்த யுத்தம் மூன்று மாதங்களில் முடிவுக்கு வந்துவிடும் என்றும் யுத்தம் முடிந்ததும் அதற்குச் செலவிடப்படும் நிதி மக்களின் நலனுக்குப் பயன்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளார், யுத்தத்தின் முடிவிலும் வெற்றியிலும் அந்தளவுக்கு அவர் நம்பிக்கை வைத்துள்ளார். அவரது நம்பிக்கை சிறிலங்கா இராணுவத்தினரின் மேலாண்மையின் அடிப்படையிலானதாகத் தான் இருக்க வேண்டும். சிறிலங்கா அரசின் இராணுவம் அத்தகைய பலம் வாய்ந்த செயல்திறன் கொண்ட இராணுவம் தானு என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

விடுதலைப்புலிகள் தாக்கப் போகிருர்கள் என்பது இருபத்திநாலு மணித்தியாலங்களுக்கு முன்னரே தெரிந்திருந்தும் மண்டைதீவு இராணுவம் எதிர்த் தாக்குதலுக்கோ அல்லது பாதுகாப்பு நடவடிக்கைக்கோ தன்னைத் தயாராக்காது இருந்தது எதனைக் காட்டுகிறது.

மண்டைதீவில் பாதுகாப்பு பலவீனமாக இருந்தது என்று இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனுல் மண்டைதீவில் இருந்துதான் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்கள் மீது பலத்த தாக்குதல்களை நடத்த இருந்த இராணுவம் பலவீனமானதாக இருந்திருக்க முடியாது. விடுதலைப்புலிகளின் அள்ளப்பட்ட இராணுவ உபகரணங்களும் மண்டைதீவில் வைத்து எரிக்கப்பட்டகார்கள்ராகிடர்கள், உழவுயந்திரங்கள் போன்றவையும் நிரந்தரமாக பொருத்தப்பட்டிருந்த மிகப் பெறுமதிவாய்ந்த இராணுவத் தளபாடங்களும் இராணுவத்தினர் அங்கு நிரந்தரமாகத் தரித்து இருப்பதற்காக அங்கு அமைக்கப்பட்ட இராணுவ முகாமாகவே அது கருதப்படவேண்டும். அத்தகைய முகாமின் பாதுகாப்பு பலவீனமான நிலையில் இருந்தது என்று கூறமுடியாது.

இதுமட்டுமல்ல கிழக்கில் நடந்துகொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான பரவலான தாக்குதல் காரணமாக பொலிசாரும் இராணுவத்தினரும் தப்பி ஒடுகிருர்கள். ஓடிய பொலிசாரை தேடிப் பிடிக்க போதிய பொலிசார் இல்லை. அந்தளவுக்கு சிறிலங்கா அரசின் பொலிசாரும் படையினரும் மனவலிமை இழந்து எப்போ வீடு செல்லலாம் என்று தருணம் பார்த்துக் கொண்டு இருக்கிருர்கள். இந்த நிலையில்தான் ஒரு பிரதியமைச்சர் மூன்று மாதத்திலும் மற்றவர் ஒருவர் ஒரு வருடத்திலும் போரை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வரப் போகின்ருர்கள். சிங்கள மக்களை ஏமாற்றுவதே அவர்களின் நோக்கம்.

# ஜே. வி. பி. இரண்டாகப் பிளந்தது புதிய கட்சி உதயம்

(கொழும்பு)

ஜனுதா விமுக்தி பெரமுன [ஜே. வி; பி] யில் இருந்து பிரிந்த குழுவொன்று புதிய அரசியல் கட்சியொன்றை நிறுவியுள்ளது.

ஜே. வி. பி போஸ்விக்குழு என்பதே இந்தக் கட்சியின் பெயராகும்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட முன்னுள் நாடாளுமன்ற அங்கத்தவரும், இலங்கை முற்போக்கு முன்னணியின் பிரதித் தலைவருமான குணசேனடி சில்வா வஸ்கடுவ இப் புதிய கட்சியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்காக தேர்தல் ஆணையாளருக்கு இக் கட்சி விண்ணப்பித்துள்ளது.

நிறைவேற்று ஜனுதிபதி அதிகாரமுறையை தாங்கள்எதிர்க்கின்ற போதிலும் வடக்கு கிழக்கு பிரச்னையை தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கருதுவதாகவும் அதுவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனுதிபதி முறை தொடர்ந்து இருப்பதை தாங்கள் ஆதரிப்பதாக இக் கட்சிச் செயலாளர் தெரிவித்தார்.

கே- சி

பலதும் பத்தும்

செவ்வந்திப் பூவே.,!

நுளம்புகளை விரட்ட அல்லித்திரின்' (Allithrin) போன்ற சில இரசாயனப் பொருட்கள் சேர்ந்த நுளம்புத்திரிகள் தயாரிக்கப்படுகின்றன அல்லவா?

Pyrethrum என்ற செவ்வந்தி இனச் செடியின் பூவிலிருந்தும இந்தப் பூச்சிகொல்லிக்கான இரசாயனப் பொருள் எடுக்கப்படுகின்றது.

கி. மு. 400ல் ஈரானியர்கள் பேன் நாசினியாகவும் இந்தச் செவ்வந்திப் பூவைப் பயன்படுத்தினுர்களாம்!

முற்காலத்தில்... சீனர்களும் ஜப்பானியர்களும்... இதனை.. ஊதுவத்தியாற பயன்படுத்தியிருக்கிருர்கள், செவ்வந்தியை... நாம் ஏன் பயன்படுத்தக்கூடாது?

— மயூரன்

★ பாகிஸ்தான் அரசு

# கராச்சி வன்செயல் பற்றிய செய்தி பிரசுரித்த 6 பத்திரிகைகளுக்கு தடை

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானில் கராச்சி வன்செயல்களை உணர்ச்சி பூர்வமாக பத்திரிகைகளில் எழுதியதாக குற்றம்சாட்டி 6 உருது மொழிப் பத்திரிகைகளை அரசு தடை செய்துள்ளது.

பாகிஸ்தானிலுள்ள சகல செய்திப் பத்திரிகைகளும் அங்கம் வகிக்கும் சங்கத்தின் மூலமாக அரசாங்கம் விதித்த விதிமுறைகளை இந்தப் பத்திரிகைகள் அலட்சியம் செய்துவிட்டதாக அரசாங்க அதிாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அதிகாலையில் இப் பதிப்பகங்களுக்குள் திடீரென நுழைந்த பொலிசார் விநியோகத்திற்கு தயாராக இருந்த பத்திரிகைகளைக் கைப்பற்றிக்கொண்டனர்.

பாகிஸ்தானின் பத்திரிகை சுதந்திரத்திற்கு வைத்த ஆப்பு இது என ஒரு நிறுத்தி வைக்கப்பட்ட பத்திரிகையின் ஆசிரியர்கள் குறிப்பிட்டார். கே-ரி

அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்த சில வாரங்களில் வெளியிடப படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அரசின் சமாதானத் திட்டம் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு எத்தகைய மாற்றுத் திட்டங்களை முன்வைக்கப் போகிறது என்பது குறித்து கருத்து வெளியிட திரு. லக்ஷ்மன் கதிர்காமர் மறுத்து விட்டார்.

பன்னிரண்டு வருடப் போருககு அரசின் இத்திட்டம் ஒரு தீர்மானம் கொண்டு வரும் என்று மட்டும் அவா கூறினுர். -கி-ரி

வடக்கில்

# தேசிய பாடசாலைகளை அமைக்க நடவடிக்கை

(மானிப்பாய்)

வடக்கில் தேசியப் பாடசாலைகளை அமைப்பதற்கு கல்வித் திணைக்களம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மன்னுர், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இத் தேசிய பாடசாலைகளை அமைப்பது தொடர்பான ஆய்வு அறிக்கைகளை சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்களங்களிலிருந்து கல்வி அமைச்சர் றிச்சாட் பத்திரானு எதிர் பார்த்துள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் 153 பாடசாலைகள் தேசியப் பாடசாலைகளாக ஆக்கப்பட்ட போதிலும் வடக்கில் ஒரு பாடசாலை கூட தேசிய தரத்திற்கு உயர்த்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது நாடெங்கிலும் 168 தேசியப் பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றிற்குச் சமனுக பிரதேச செயலர்பிரிவு மாவட்டத்தில் தலா இரண்டு பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கு கல்வி அமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் நாடெங்கிலுமுள்ள 235 பிரதேச செயலர் பிரிவில் மொத்தம் 470 பாடசாலைகள் தரமுயர்த்தப் படவுள்ளன. 71

நாடக விழா

(அரியாலை)

யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்தநாடகவிழா இன்றுசனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும், நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வுக்கு யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு. குழந்தை சண்முகலிங்கமும் 2ம் நாள் நிகழ்வுக்கு மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் திரு, ந.சூரியநாதனும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். -59

நிவாரணமுத்திரை

(பண்டத்தரிப்பு)

வலிகாமம்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வறுமை நிவாரணம் பெற தகுதியுள்ள குடும்பங்களுக்கான வறுமை நிவாரண முத்திரைகள் அவ்வப்பகுதி கிராம அலுவலர்களினுல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்தப் பயிலரங்கும் ஆய்வரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 3 மணிககு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பயிலரங்கில் கிரக ஸ்புடங்கள், கிரகக் கிராந்திகள். இராசிக் கிராந்திகள் என்னும் விடயங்கள் இடம்பெற உள்ளன. ஆய்வரங்கில் ஒன்றிய உபதலைவர் திரு. எஸ். பத்மநாதன் சோதிட சாஸ்திரமும் நோய்களும் என்னும் ஆய்வுரையின் தொடரை நிகழ்த்துவார் டாக்டர். ரி. வெற்றிவேலு சோதிடத்தின் மூலம் அமையக் கூடிய தொழிற்துறை பற்றி ஆலோசனை வழங்குவார்.

மாசுற்ற சூழல் மனிதனின் காலன்

விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்படவுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்த மாநாடு நாளை முடிவுறும தறுவாயில் இத்தீர்மானம் நிறைவேற்றப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மிகப் பிரமாண்டமான ஏற்பாட்டில் நடைபெறும் மறுமலர்ச்சி தி. மு க. வின திருச்சி மாநாட்டில் கழகத்தின் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் பங்குபற்றி வருகின்ருர்கள். -கி-ரி

மண்டைதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன.

இதேவேளை காரைநகர் கடற் பிராந்தியத்திலிருந்து நேற்றுக்காலை கடற்படையினர் கரையோரப் பகுதியை நோக்கி கடுமையான பீரங்கி தாக்குதலை மேற்கொண்டனர்.

காரைநகர் இராணுவ முகாமிலிருந்தும் கரையோர பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. -90-170-ரி

மண்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தது. மண்டைதீவை விட்டு விடுதலைப்புலிகள் வெளியேறிய பின்னர் ஊர்காவற்றுறையிலிருந்து 25வது பிரிகேட் தளபதி பிரிகேடியர் சரத் பொன்சேகா தலைமையிலான இராணுவ அணி மண்டைதீவில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது. (கி-ரி)

# திருமலை கன்னியாவில் இந்துக்கள் தீர்த்தமாட இராணுவம் தடை!

(திருமலை)

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுக்குச் சென்று இந்துக்கள் புனிததீர்த்தமாடி தமது வழிபாடுகளை மேற்கொள்ள இராணுவத்தினர் தடைவிதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினரின் தடை காரணமாக இந்துக்கள்பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர்.

இதேவேளை திருமலையில் இந்துக்களின் கல்யாணமண்டபம் ஒன்றில் இராணுவம் முகாம் அமைக்க முறபட்ட போது திருமலை வாழ் இந்துக்களின் பலத்த எதிர்ப்பாலும் மாநகராட்சி மன்றத்தின் தீவிர செயற்பாட்டாலும் அந்தத்திட்டம் இராணுவத்தால் கைவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள பாடசாலைகளில் முகாம் அமைக்க குறிப்பிட்ட சில மாதங்களுக்குக் கட்டடங்களை தமக்கு ஒப்படைக்குமாறு இராணுவம் வற்புறுத்தி வருகின்றதாம். பாடசாலை மாணவர்களும் பெற்றோர்களும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. -155-ரி

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு டீசல் அனுப்ப அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு டீசல் மற்றும் ஒட்சிசன் சிலிண்டர்களை கப்பலில் எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு அனுமதி வழங்க மீண்டும் மறுத்துள்ளது.

ஏப்ரல, மே மாதங்களுக்கான கோட்டா டீசலை கப்பலில் எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு முன்னர் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆனல் இந்த அனுமதி நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் தங்கியிருக்கும் டாக்டர் சிவகுமாரன் நேற்று யாழ். போதனாவைத்தியசாலை டதில் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

இதனைவிட ஒட்சிசன் சிலிண்டர்களையும் கபபலில் எடுத்து செல்வதற்கு பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு தடைவிதித்துள்ளதாகவும் டாக்டர் சிவகுமாரன் மேலும் அறிவித்து ளார்.

மண்ணெண்ணை பரல்களை ஏற்றிவர இருக்கும் 'மாகோ' கப்பலில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு டீசல் மற்றும் எரிபொருள்களை கப்பலில் கொண்டு செல்வதற்கு யாழ். அரச அதிபருக்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனல் அந்த அனுமதியும் தற்பொழுது ரத்துச்செய்யப்பட்டிருக்கலாமென்று தெரிவிக்கப்படுகிறது. 170 ரி

# ராணுவத்தின் இறுதிசடங்கையொட்டி கொழும்பில் இன்று தீவிர பாதுகாப்பு

(கொழும்பு)

மண்டைதீவு இராணுவ முகாம் தாக்கி அழிக்கப்பட்ட போது கொல்லப்பட்ட இராணுவத்தினரின் இறுதிக் கிரியைகள் இன்று தென்பகுதியில் இடம்பெறவுள்ளன.

இவர்களின் சடலங்கள் தற்பொழுது தென்பகுதியைச் சென்றடைந்துள்ளன.

இராணுவத்தினரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறுவதனல் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக கொழும்பின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மண்டைதீவு தாக்குதலில் பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதினல் இதனைப் பயன்படுத்தி தெற்கில் தமிழர்களுக்கெதிரான வன்செயல்கள் தூண்டிவிடப்படலாமென அஞ்சப்படுகின்றது. கி-ரி

# இனப்பிரச்னை தீர்வு குறித்து அரசு விடுதலைப்புலிகளுடன் பேசமாட்டாதாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இனப்பிரச்னை தீர்வு குறித்து விடுதலைப் புலிகள் இயக்கததுடன் இனிமேல பேச்சுவார்த்தையை மேற்கொள்வதில்லையென அரசு முடிவெடுத்திருப்பதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துல்ளார்,

நேற்று கொழும்பில் நடந்த கூட்டமொன்றில அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசின் சமாதான திட்டம் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு எத்தகைய மாற்றுதிட்டங்களை வழங்கப் போகின்றது என்பது குறித்து கருத்து வெளியிட லக்ஷ்மன் கதிர்காமர் மறுத்து விட்டார்.

வடக்கு- கிழக்கு பிரச்னையைத் தீர்ப்பபதற்கான அதிகார பகிர்வு குறித்து இதர தமிழ்க் குழுக்களுடன் அரசு ஏற்கனவே பேச்சு நடாத்தியுள்ளது.

இந்த விடயத்தில் அத்தமிழ் குழுக்களுடன் அரசு கணிசமான உடன்பாடு கண்டுள்ளது எனவும் லக்ஷ்மன் கதிர்காமர் கூறினர். கி-ரி

## பாஸ்கரலிங்கத்தை இலங்கைக்கு கொண்டுவர முயற்சி

(கொழும்பு)

நிதி அமைச்சின் முன்னள் செயலாளரும், முன்னள் ஜனதிபதி பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரியவருமான ஆர். பாஸ்கரலிங்கத்தை இலங்கைக்கு வரவழைப்பதற்கான முயற்சியில் ஊழல்கள், ஒழுங்கீனங்கள் பற்றி வசாரணை செய்துவரும் விசேட ஜனுபதி ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது.

திரு. பாஸ்கரலிங்கம் தற்பொழுது லண்டனில் தங்கியுள்ளார். கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பல்வேறு ஊழலகள் தொடர்பாகவும் இவரை விசாரணை செய்ய வேண்டியுள்ளதாகவும் ஆனல் அதற்கான அழைப்பாணையை பெருது இவர் தலைமறைவாக இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆணைக்குழுவை அவமதித்தார் என்ற வகையில் உயர் நீதிமன்றத்தின் கட்டளையைப்பெற்று அவரை லண்டனில் இருந்து இலங்கைக்கு வரவழைத்து விசாரணை உட்படுத்த தற்போது முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

கே-கி-ரி


பண்டிதமணி நினைவுப் பேருரை

28-6-95இல் தவிர்க்க முடியாது ஒத்திவைத்த

பண்டிதமணி நினைவுப் பேருரை

01-7-1995 சனிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு

கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அறங்காவறகுழு.

திருநெல்வேலி. (ஈ-1536)



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில், மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு யூலை மாதம் 01-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B / 1633613.


## மண். மீட்கப்பட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

* ரி 56-2 -168
* ரி 81 - 45
* ஜி 3 புஸ் பட் - 01
* ஆர் பி.டி.எல்.எம்.ஜி- 10
* பி .கே. ஜி பி.எம். ஜி- 02
* 50 கலிபர் - 01
* 40 எம். எம்.பிஸ்ரல் - 05
* ஆர். பி. ஜி, - 05
* 60 எம்.எம. கொம் மோட்டர் - 03
* 9 எம் எம் ரவை - 78
* ஐ எம். ரவை 1,27 424
* ட்நடோ ரவை -120
* பி. கே ரவை 1,519
* 0.30 கலிபர் ரவை 2,363
* 0.50 கலிபர் ரவை 1,359
* லிங்குடன் ஐ எம். ரவை -4 294
* லிங்குடன் நேட்டோ ரவை -120
* பி கே. லிங்குடன் ரவை -489
* ஐ. எம். காஸ் ரவை - 98
* ரைபிள் கிறனேட் - 96
* 40 எம்.எம ஷெல் - 23
* 40 எம் எம் கிளினிங் பிறஸ் - 05
* ஆர். பி. ஜி. ஷெல் - 05
* ஆர்.பி ஜி.புரொப்ளர் - 25
* ஆர். பி ஜி. ஸ்கோப்- 09
* ஆர். பி ஜீ. கிளினிங் றொட் - 06
* 60 எம். எம். ஷெல் -132
* 60 எம்.எம். ஸ்பொட் லைட் - 02
* 60 எம்.எம். சுடும்ஊசி- 10
* 60 எம். எம். கிளினிங் றொட் - 11
* பரா லைற் - 17
* 81 பரா லைற் - 07
* சலாடீன்ஷெல் -119
* ஷெல (பெரிது) - 02
* கக்குண்டு -225
* கிளேமோர் - 42
* கிளேமோர் வெடிக்கவைக்கும்கருவி - 42
* பயிற்சிக்குரிய மிகச் சிறிய ஷெல் - 12
* சாஜர் லைற் - 05
* தொலைத் தொடர்பு சாதன - 11
* அதற்குரிய பற்றறி - 17
* தொடர்பு சாதன அம்பிளிவயர் - 02
* பற்றிசாச்சர் பெரிது - 01
* அம்ளிவயர் - 03
* ரெலி கொம் [250W 5A] - 01
* பவர் சப்ளை - 03
* மின் கொன்வேட்டர் (3A) அம்பியர் - 02
* பைனகுலர் - 03
* நைட் விஷன் - 06
* நச்சு வாயு காப்பு - 06
* ஏ. கே. மகசின் 1000
* றம் மகசீன் - 75
* ஜீ-3 மகசீன் - 04
* லிங் 500
* ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் - 20
* சீரோசாவி - 90
* சுடும் ஊசி - 18
* ஏ கே கிளினிங்செற் -110
* ரி 81 பைனட் - 18
* டிக்னேட்டர் - 10
* வயர் றோல் - 09
* 12 V பற்றி - 03
* 9V பற்றி - 01
* தொலைக்காட்சிப் பெட்டி - 03
* டெக் - 02
* ஸ்பீக்கர் - 01
* ரைப்றேற்றர் - 04
* தண்ணீர் கான் - 38
* தலைக்கவசம் - 15
* மில்ரி சூ 100சோடி
* றெயின் கோட் - 25
* கொமாண்டோ பெட்- 10
* உருமறைப்புவலை - 04
* ரைபிள் சிலிங் - 75
* சிங்கர் ஒயில் கான் - 50
* ஒயில் கான் [சிறியது] - 50
* செலைன் - 3 பெட்டி
* ஏனைய மருந்துப் பொருட்கள் 4 பெட்டி
* அலுவலக பொருட்கள் 3 பெட்டி

ரி

## தமிழீழ பொ. கல்வி தேர்வு இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் செய்முறைத்தேர்வு இன்று முதல் வட தமிழீழம் முழுவதும் நடைபெறவிருக்கின்றது. தேர்வு நிலையங்களுக்கான வினுத்தாள் பொதிகளை கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து முதன்மைத் தேர்வாளர்கள் காலை 7-30 மணிக்குப் பெற்றுக்கொள்வார்கள்.

## குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தினரால் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளார்.

மூதூர் கிளிவெட்டியில் செல்லையா பேரின்பராசா 55 வயது) என்பவரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவராவார்

இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார். கி

## இராணுவத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பிக்குவிடம் ஒப்படைத்துவிட்டு இவர்கள் நால்வரும் இராணுவத்தில் இணைந்தனர்.

இராணுவத்தில் இவர்கள் அவர்களது சொந்தப்பெயரில அழைக்கபபடுவர்

இராணுவத்தைவிட்டு வெளியேறும் சந்தர்ப்பத்தில் இவர்கள் மீண்டும் மஞ்சள் ஆடையை அணிந்து மதக்கடமைகளில் ஈடுபடவும், அவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட குருவுக்குரிய பெயரில் அழைக்கப்படவும் அனுமதிக்கப்படுவர். கி-ரி

## விடுதலைப் புலிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பொழுது ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்வது.

விடுதலைப் புலிகள் அமைப்பை ஒரு சட்டவிரோத அமைப்பாக பிரகடனப்படுத்த வேண்டுமெனவும், அதன் நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக அரசு தடை செய்யவேண்டுமென வும் தெல் மாகாண சபையின் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது. (கி-ரி)

## ஈழநாடு ஊழியர்

[1ம் பக்கத்தொடர்ச்சி]

கடந்த இருதினங்களாக அடையாளம் காணப்படாது யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையிலிருந்து இவரது சடலம் நேற்றுக் காலை உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

கைதடியைச் சேர்ந்த இவர் நீர்வேலியில் திருமணம் செய்திருந்தார். இவருக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். 'ஈழநாடு நிறுவனத்தில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அச்சகப் பகுதியில் பணியாற்றி வந்துள்ளார்.

கடந்த 28 ம் திகதி யாழ். நகரில் இடம்பெற்ற மிகமோசமான ஷெல் தாக்குதலின் மத்தியிலும் கடமையை கண்ணாக கருதியும், பத்திரிகை எதுவித தாமதமுமின்றி மக்களுக்கு சென்றடைய வேண்டுமென்ற நோக்கிலும் அலுவலகத்திற்கு விரைந்த ஈழநாடு நிறுவன ஊழியர்களில் இவரும் ஒருவராவார்.

அரசின் அராஜகங்கள், கொடுமைகள் பற்றிய செய்தி மக்களுக்கு உரிய நேரத்தில் சென்றடைய வேண்டுமென மிக மோசமானதொரு சூழ்நிலையிலும் கருதி செயற்பட்ட இந்த ஊழியரின் இழப்பு எமது நிறுவனத்திற்கு பேரிழப்பாகும்.